**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 23.08.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

**1.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு உரிம இனங்களை 2021–2022 முதல் 2023–2024 முடிய உள்ள ஆண்டிற்கு ஏலம் விட்டு ஒப்படைக்கும் பொருட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலமோ, ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோராததால் கீழ்க்கண்ட உரிம இனங்களை துறை மூலம் வசூலிக்க நகர்மன்றத் தீர்மானம் எண்.66, நாள்.31.05.2021ல் அனுமதி பெறப்பட்டது.

1. மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்
2. மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. மேட்டூர் புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள யானைப்புல் வளர்த்து அதன் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.
5. சேலம் கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

மேற்படி கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு இந்நகராட்சியில் ஏற்கனவே மேற்காணும் உரிம உரிம இனங்களுக்கு டிக்கெட் புத்தகங்கள் இருப்பில் இல்லாததாலும், துறை மூலம் உடன் வசூலிக்கப்பட வேண்டி இருந்ததாலும், அவசர அவசியம் கருதி உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று அச்சிட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ.எண். | விலைப்புள்ளி வழங்கியவர் விவரம் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | பூபதி அச்சகம்,<br>8–36ஏ, கிழக்கு மெயின் ரோடு, (பழைய மார்க்கெட்),<br>மேட்டூர் அணை. | ரூ.27.50 |
| 2. | ஸ்ரீ வீரமாத்தியம்மன் பிரிண்டர்ஸ்,<br>கிழக்கு மெயின் ரோடு,<br>கமலம் இல்லம், 166–93, இந்திரா நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.30.50 |
| 3. | பரணி பிரஸ்,<br>இந்திரா நகர், மேட்டூர் அணை. | ரூ.31.50 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் கண்டுள்ள விலைப்புள்ளி தொகையானது குறைவானது என்பதாலும், மேற்படி ஏல இனங்களை, நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு துறை மூலம் உடன் வசூலிக்க வேண்டி இருந்ததாலும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள பூபதி அச்சகம், மேட்டூர் அணை என்ற

அச்சகத்தாரின் விலைப்புள்ளியை உறுதி செய்து உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண். 92 நாள்.23.08.2021**

**அலுவலககுறிப்பு ஏற்றுஅனுமதிக்கப்பட்டது**

**2.** அரசாணை (நிலை) எண். **166**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் **23.11.2016**-ன்படி, அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பணி, பள்ளி வளாகம் முழுவதும் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் வருடந்தோறும் நிர்ணயிக்கும் மாவட்ட சந்தை விகிதசாரப்படி, தனியார் துறை ஒப்பந்த அடிப்படையில், பணியாளர்களை பணியில் அமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவு தொகை மற்றும் மேற்கண்ட அனைத்து தூய்மைபணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமான்கள், கிருமிநாசினி மருந்துகள் மற்றும் பவுடர்கள் வாங்கி வழங்கவும், அதற்காக ஆகும் செலவின தொகையினை அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் கல்வி வரியின் (Educatuion cess) மூலம் மேற்கொள்ளவும், அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் அறிவுரைகளின்படி, மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட 7 எண்ணிக்கை அரசு/நகராட்சி பள்ளிகளில், பள்ளியின் அனைத்து அறைகளும், கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் பள்ளியின் சுற்றுப்புற வளாக பகுதிகள் முழுவதும் (House Keeping Activites of the School) சுத்தம் செய்ய **12** பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்காக நபர் **1**-க்கு நாள் **1**-க்கு ரூ.**457/-** வீதம், திரு.கே.கோவிந்தன் ஒப்பந்ததாரர் ஓமலூர், என்பவருக்கு **07.08.2020** முதல் ஒரு ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு, மேற்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் **06.08.2021**-ந் தேதியுடன் முடிவடைகின்றது. தற்பொழுது பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரரான திரு. கே.கோவிந்தன் என்பவர் தனது **23.07.2021**-ந் தேதிய கடிதத்தில், தனக்கு ஏற்கெனவே வழங்கிய உத்தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 7 அரசு/நகராட்சி பள்ளிகளில் அனைத்து தூய்மை சார்ந்த பணிகளை நாள் **1**-க்கு **12** நபர்களை பணிக்கு ஈடுபடுத்தி தூய்மை பணிகள் மேற்கொண்டதில் எந்த ஒரு புகார்களுக்கும் இடமின்றி பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றேன் எனவும், ஏற்கனவே பணி செய்து வரும் ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு பணிகளை மேற்கொள்கிறேன் எனவும், மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து தருமாறும் கேட்டுள்ளார். எனவே, 2019-2020 மற்றும் **2020–2021**-ம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த புள்ளி தொகைக்கும் மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் பணிகளை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதின் பேரில், திரு.K.கோவிந்தன், பூசாரிபட்டி, ஓமலூர் அவர்களுக்கு **07.08.2021** முதல் மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.**20.00** இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2248/2019/எச்1)**
**தீர்மான எண். 93 நாள்.23.08.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**